## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 22/2018** **நாள். 09.10.2023**

2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்புராயன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | அப்பாசாமி | சாதி | |
| கிராமம் | நொச்சலூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 44 |

ம..சா.1

**குறுக்கு விசாரணை**

I. எனது சொந்த ஊர் நொச்சலூர் ஆகும். தற்போது திருக்கோவிலூர் தாலுக்கா செட்டிதாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். 20.12.2017 ம் தேதி இரவு 10 மணிக்கு தாயனூர் இ.பி. ஆபிஸ் அருகே விபத்து நடந்தது. அப்போது என்னுடன் என் மாமா ரமேஷ் என்பவர் இருந்தார். என் மீது TN 16 Y 0812 என்ற பதிவு எண் கொண்ட Splender Plus இருசக்கர வாகனம் மோதிவிட்டது. மேற்படி வாகனத்தை யார் ஓட்டிவந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்ணை பார்க்கவில்லை என் மாமா ரமேஷ் பார்த்தார். என் மாமாவை விசாரித்தால் தான் விபத்துஏற்படுத்திய வாகனத்தை பற்றி தெரியும் என்றால் சரிதான். விபத்தில் எனக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது. காயம் பட்ட உடன் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். என்னுடன் மருத்துவமனைக்கு மாமா ரமேஷ், மற்றும் சங்கர் என்பவரும் வந்தார்கள். சங்கர் என்பவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்த உடன் சங்கர் என்பவருக்கு போன் செய்து சொன்ன உடன் அவர் மருத்துவமனைக்கு வந்தார். பின்னர் நகிரிபுத்தூருக்கு சென்று கட்டு கட்டி வந்தேன். வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவில்லை. நகரிபுத்தூருக்கு சென்று சிகிச்சை பெற்றதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ. 4 ஆவணத்தை கள்ளக்குறிச்சி மாவட்ட மாற்று திறனாளிகள் நல அலுவலகத்தில் வாங்கினேன். ம.சா.ஆ.3 ஆவணத்தை கள்ளகுறிச்சி அரசு மருத்துவமனையில் வாங்கினேன்.

II. கள்ளகுறிச்சி மாவட்ட நிர்வாக சார்பில் நடத்தப்பட்ட முகாமில் மனு கொடுத்து ம.சா.ஆ. 3 மற்றும் 4 ஆவணங்களை வாங்கினேன். மேற்படி ஆவணங்கள் பெறுவதற்காக நான் சிகிச்சை பெறவில்லை. மேற்படி ஆவணங்கள் அரசு உதவி பெறுவதற்காக 40% ஊனம் என்று அதிகப்படுத்தி வாங்கினேன் என்றாலும் ,அதை இவ்வழக்கில் ஏற்க கூடாது என்றாலும் சரியல்ல. விபத்து சம்பந்தமாக ரமேஷ் என்பவர் புகார் கொடுத்தார். விபத்து நடந்த அன்று நகிரிபுத்தூருக்கு சென்று கட்டு போட்டு கொண்டு மறுநாள் வந்துவிட்டேன். புகார் 5 நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் மீது அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது என்றாலும் அதனால் தான் நஷ்டயீடு பெறுவதற்காக 5 நாட்கள் கழித்து 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தை ஏற்படுத்தியதாக பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. அடையாளம் தெரியாத வாகனம் மோதியதால் தான் விபத்துஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் பெயர் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். போலிசார் வழக்கை விசாரித்து 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லுவது உண்மையில்லை என்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் வழக்கை முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

III. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் விபத்தின் போது காப்பிடு செய்யப்பட்டிருந்தாலும், 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தில் சம்பந்தப்படாததால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு நஷ்டயீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பாரா 5ல் சொல்லியுள்ளபடி நான் எந்த மருத்துவரிடமும் சிகிச்சை பெறவில்லை என்றாலும், அதிக நஷ்டயீடு பெறுவதற்காக தவறான விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் டீ கடை வைத்தும், டீ மாஸ்டர் வேலை செய்தும் மாதம் ரூ. 30 ஆயிரம் சம்பாதிப்பதாக அதிக நஷ்டயீடு பெறுவதற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.